முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1566

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.01.2024, வெள்ளிக்கிழமை

1. பரபிரம்ம ஞான சொரூபமே
   பாமரர்க்கும் ஞானம் அருள வந்த
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
   அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. வரமென ஞான அறிவுரை ஆசி
   வழங்குவேன் சோபகிருது சிலை திங்கள்
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 27 ம் நாள், 12.01.2024, வெள்ளிக்கிழமை)
   திங்களிலே அரங்கனுக்கு சக்தி கூட்டி
   தெரிவிப்பேன் உலகமாற்றம் நிகழ்த்த
3. இங்கனமே ஆறுமுகனுடன் உள்ளே எல்லா காலமும் அரங்கனுக்கு
   உணவாக வாசியாக அனைத்து மகா சக்தியாக இயக்கம் தருகின்றேன்
   வகைபட அரங்கனை நாடி வரும் அன்பர்களுக்கு
   வரமாக அரங்கன் வழி தீட்சை தருகின்றேன்
4. தருகவே அரங்கன் தடத்தில்
   தண்டாயுதன் யான் பரிபூரணமாய்
   ஒளியாக சக்தியாக
   மகா சொரூபமாக நிரம்பியுள்ளேன்
5. உள்ளபடி ஒவ்வொரு மனிதரும்
   உலகப்பேராசான் அரங்கன் குடிலில்
   அரங்கன் அறைக்கு உள் வந்தால் போதும்
   அவர்கள் வினைநீங்கி
6. குறை இல்லாத பெருவாழ்வும்
   கூறிடுவேன் ஞான பலமும் நிறைவான
   இனிப்பிறவாத பெரும் பேறு ஞானமும் சித்தியும்
   உலகத்துக்கே மாற்றம் தரும் மகா சக்தியும் பெற்று சிறப்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–